பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 04 வெள்ளிக்கிழமை 19.12.2025 கதிர் 041

## இது ரகசியம் அல்ல!

தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசனின் முனைப்பில்விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவனின்

☞2

# தேசிய மக்கள் சக்தி நூதன இனப் படுகொலை முயற்சி

## நாடாளுமன்றில் சிறீதரன் குற்றச்சாட்டு

நாட்டில் தற்போது நடப்பது ஆளும்தரப்பின் ஜனநாயகநடைமுறையா? அல்லது தேசியமக்கள் சக்தியின் அராஜகமா? கடந்த ஆட்சியாளர்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தீர்கள். அவர்கள் ஆயுத ரீதியில் எமது மக்களை இனப்படுகொலைகளை செய்தனர். ஆனால் கண்ணுக்குத் தெரியாத நூதனமான முறையில் சுற்றறிக்கைகள் மூலம் தேசிய மக்கள் சக்தி இன்னுமொரு மிகப்பெரிய இனப்படுகொலை மற்றும் இனவழிப்பை நாட்டில் செய்வதற்கு முயற்சிக்கின்றதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் மற்றும் அதற்கு பின்னரான நிலமைகள் மக்களை பெருமளவில் பாதித்துள்ளது. இயற்கையை இந்த நாடு சரியான முறையில் பேணவில்லை. இயற்கைக்கான பாதுகாப்புகளையும் முன்னறிவித்தல்களையும் நாட்டின் தலைவர்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளாமையும், தற்போதைய

☞2

## தரம்குறைந்த மருந்தால் ஏற்பட்ட இறப்புக்களுக்கு யார் பொறுப்பு?

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் நாடாளுமன்றில் கேள்வி

ஐ.டி.எச். வைத்தியசாலையில் இறந்த இரண்டு நோயாளர்களின் உயிரிழப்புக்கும் தரம் குறைந்த மருந்தே காரணமெனத் தெரியவருகிறது. இந்த உயிரிழப்புக்களுக்கு பொறுப்பு கூறுவது யார் என்று கேட்கிறோம்? அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலமைக்கு மத்தியில் தரம் குறைந்த மருந்து பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவரும்

☞7

## யாழ். தையிட்டி விகாரை தொடர்பில் வலி. வடக்கு சபையில் புதிய தீர்மானம்

யாழ். மாவட்டம் தையிட்டியில் தனியார்காணிகளையும்ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள விகாரையை சட்டவிரோத விகாரை என்று தெரியப்படுத்தி அறிவித்தல் பலகை வைக்கப்படவேண்டும் என்று வலி. வடக்குப்பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று பிரதேசசபையின் தவிசாளர் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, தையிட்டி தெற்கில் பொதுமக்களின் காணியில் சட்டவிரோதமாக அமைந்துள்ள 'திஸ்ஸ விகாரை' எனக் கூறப்படும் கட்டடத்திற்கு எந்த அனுமதியும் பிரதேச சபையில் பெறப்பட்டிருக்காத நிலையில், பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளிற்கேற்ப இக் கட்டடமானது சட்ட விரோதம்என்பதைஅறியப்படுத்தமும்மொழிகளிலும் சபையினால் அறிவித்தல் பலகை ஒன்று நாட்டப்பட வேண்டும்எனதமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் உறுப்பினர் பத்மநாதன் சாருஜனால் பிரேரணை ஒன்று சபையில் கொண்டுவரப்பட்டது. குறித்த பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததை அடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தோடு சட்ட விரோத தையிட்டி விகாரையின் விகாராதிபதியின் பதவி உயர்வுக்காக எதிர்ப்பை சபையில் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனவும் பத்மநாதன் சாருஜனால் பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டது.

☞6

## பொருளாதாரம் உறுதியாக உள்ளது வீழ்ந்தாலும் சிறப்பாகவே மீள்வோம்

### மார் தட்டுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்

பேரிடர் நிலமையினால் 2026 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்படும், எரிவாயு விநியோகத்தில் பாதிப்புஏற்படும்என்றுஎதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களை அச்சமடைய செய்ய முயற்சிக்கிறார்கள். இது மிகவும் கீழ்த்தரமானதொரு செயறபாடு என்றே குறிப்பிட வேண்டும். பொருளாதாரம் உறுதியாக உள்ளது. வீழ்ந்தாலும் சிறந்த முறையில் மீண்டெழுவோம். அதற்கான சக்தி எமக்கு

☞6

## 5 தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய தூதருடன் சந்திப்பு

### டிசெம்பர் 23 கொழும்பில்

இலங்கை தமிழ் அரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து இலங்கைக்கான இந்திய உயராணையர்சந்தோஷ்ஜாவை

☞6

## மலையகமே எங்களது தாயகம் நாம் வேறு எங்கும் செல்லோம்

### இராதாகிருஸ்ணன் எம்.பி. சபையில் வலியுறுத்து காணி தந்து வசதிகளை ஏற்படுத்தவும் கோரிக்கை

மலையகம் எமது தாயகம். நாங்கள் மலையகத்தைவிட்டு யாழ்ப்பாணத்துக்கோ, மட்டக்களப்புக்கோ செல்வதற்கு தயார் இல்லை. அதனால் மலையக மக்களுக்கு 7 பேர்ச்

☞2

## பெருந்தோட்ட மக்களுக்குத் தீர்வு என்ன? அவர்களின் மீள்குடியேற்ற திட்டம் என்ன?

### நாமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் கேள்வி

தோட்டங்களில் பணி புரியும் மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் என்ன? இந்த மக்களை மீள குடியேற்ற உங்களின் திட்டம் என்ன என்பதனை கூற வேண்டும்.

மலையக பகுதிகளில் பாதுகாப்பான வாழ்க்கைச்சூழல்பிரச்சினைக்குரியதாக

☞6

## வட–கிழக்கிற்கான சேவைகள் ஜனவரி 1 முதல் தொடக்கம்

### தொடருந்துத் திணைக்களம் அறிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்குக்கான தொடருந்து சேவைகள் 2026.01.01முதல் முழுமையாகத் தொடங்கப்படும். 2026 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தலைமன்னாருக்கான தொடருந்து சேவைகள் தொடங்கப்படுமென போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன

☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏற்பாட்டில் தமிழ்நாடு சென்றிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு குறித்த செய்திக் குறிப்பையும் படங்களையும் ஐங்கரநேசன் ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தார். ஆனால், இந்தச் சந்திப்புக்கு தமிழ்நாட்டு அரசியல் சூழலில் எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ்நாட்டு முதலமைச்சரைச் சந்திப்பதற்குச் சிலர் விடுத்த கோரிக்கையின் பேரில் அவர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை முதல்வர் கேட்டார் என்பதற்கு மேல் இந்த விடயத்தை முக்கியத்துவப்படுத்த திமுக விரும்பவில்லை என்பதைத் தமிழ்நாட்டிலுள்ள நண்பர்கள் மூலம் அறிய முடிந்தது.

இந்தச்சந்திப்புக்குறித்தோ அதில்பேசப்பட்ட விடயங்கள் குறித்தோ தமிழ் நாட்டில் உள்ள ஊடகங்களுக்கு அரசுத் தரப்பிலிருந்தோ திமுக தரப்பிலிருந்தோ எந்தவித முக்கிய தகவல்களும் தரப்பட்டிருக்கவில்லை என்பதை தமிழ்நாட்டு ஊடக நண்பர்கள் உறுதிப்படுத்தினார்கள். நான் இது தொடர்பில் கேட்கும்வரையில்அவர்களுக்குத்தகவல்கூடத் தெரிந்திருக்கவில்லை. கேட்ட பின்னரும் அரசுத் தரப்பில் தகவல் கேட்டவர்களுக்கு அதுவொன்றும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பல்ல என்று தகவல் தெரிவிக்கப்பட்டதாகச் சொன்னார்கள்.

ஆக, மொத்தத்தில் தமிழ் நாடு முதலமைச்சரைச் சந்தித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தமது குறைகளைத் தெரியப்படுத்தினர் என்பதற்கப்பால், ஈழத் தமிழர் அரசியலை முன்னகர்த்தக்கூடிய ஒரு சந்திப்பாக இது அமைந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. இருந்தாலும் மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் ஈழத் தமிழ் அரசியல் தரப்பு ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் நேரில் உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப் பேச எடுத்த முடிவு தமுக மற்றும் தமிழ்நாட்டு அரசியல் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமா என்று திமுக தரப்பினரிடம் கேட்டேன். அப்படி எந்தக் கொள்கை மாற்றம் குறித்தும் கட்சிக்குள் பேச்சடிபடவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டு மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடிப் பிரச்சினைக்கு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு கிழக்கில் மீனவர்கள் கடும் எதிர்ப்பைக் காட்டிவரும் நிலையில், அடுத்தாண்டு தேர்தலின்போது, இந்தப் பிரச்சினை திமுகவிற்குச் சவாலாக எழுந்தால், அதனைச் சமாளிப்பதற்கான ஓர் ஆயுதமாக இந்தச் சந்திப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்கிற அளவில் திமுக கொள்கை வகுப்பாளர்கள் இந்தச் சந்திப்புக்குத் திட்டமிட்டிருக்கலாம் என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

எது எப்படியாக இருந்தாலும் தமிழ்நாடு, ஈழத் தமிழர் அரசியலில் மீண்டும் ஒரு நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது நல்ல விடயம்தான். இதனைப் பக்குவமாக வளர்த்தெடுத்து எதிர்காலத்தில் பயனுள்ள வகையில் முன்னகர்த்த இரு தரப்பினரும் முயற்சி செய்தால் அது பாக்கு நீரிணையின் இருகரைத்தமிழர்களுக்கும்நன்மைபயக்கும். இலாபக் கணக்கு இல்லாமல் எந்த அரசியல் நகர்வுகளுக்கும் இடமில்லை என்பதுதான் யதார்த்தம். இந்த விடயத்தில் அது இரு தரப்பினருக்குமான இலாபமாக, அதாவது வின் வின் சிட்சுவேசனாக (ழிஷ்ஜ ழுஷ்ஜ விஷ்மிற்ழிமிஷ்லிஜ) அமையுமானால் அது பயனுள்ளதுதான்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஒரு மனுவும் தமிழ்நாடு முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அதில் உள்ளவிடயங்கள்தான் அவர்களின்பேச்சிலும் இடம்பெற்றிருந்ததாகச் சொல்லப்பட்டது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை இங்கே தருகின்றேன்.

இலங்கை ஆளும்தரப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் புதிய அரசமைப்புஒன்றைஉருவாக்கும்முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறித்த முயற்சியானது ஈழத்தமிழர்களின்அரசியல்அபிலாஷைகளை உள்ளடக்குவதாக அமையவேண்டும் என்ற நோக்கிலேயே எமது தொப்புள்கொடி உறவுகளான தமிழக மக்களினதும், அதன் முதலமைச்சரான தங்களதும் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் இந்தச் சந்திப்பைக் கோரியிருந்தோம்.

நீங்கள் ஈழப்போராட்ட வரலாற்றை நன்கு அறிந்தவர். 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் தலையீட்டின் பிரதிபலனாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவ்வொப்பந்தத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, குறித்த வடக்கு-கிழக்குமாகாணங்களைஒருஅலகாகக்கொண்டு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்பது கோட்பாட்டளவில்ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்குச் செயல்வடிவம் வழங்குதல் எனும் பெயரில் இலங்கை ஆளும்தரப்பினால் அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தமும், அதனூடாக உருவாக்கப்பட்ட மாகாணசபைமுறைமையும்ஓர்ஒற்றையாட்சி வரையறைக்கு உட்பட்டு உருவாக்கப்பட்ட முறைமையாகவே காணப்படுகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தாற்பரியத்தையும், ஈழத் தமிழர்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்ற கோட்பாட்டையும் மிகத் தந்திரமாக நிராகரிக்கும்நோக்கிலேயே ஆளும்தரப்பினால் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாக இந்த மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை இலங்கையின் இறுக்கமான ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமையினால் மாகாணசபைகளுக்குஎந்தவொருஅதிகாரமும் பகிர்ந்தளிக்கப்படமுடியாது என்றும், அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசின் முழுமையான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என்றும் இலங்கையின் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 2015 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நல்லாட்சி ஆளும்தரப்பினால் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய இராச்சிய'அரசமைப்புவரைவைஇறுதிப்படுத்தி நிறைவேற்றப்போவதாகத் தற்போதைய ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. இந்த வரைவானது ஏற்கனவே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை விடவும் மிகப் பலவீனமானதாகும்.

இந்நிலையில் தொப்புள்கொடி உறவுகளானதமிழக மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவரான நீங்களும் மத்திய அரசு ஊடாக இலங்கை ஆளும்தரப்பின்மீது அழுத்தங்களைப் பிரயோகித்து 'ஏக்கிய இராச்சிய'அரசமைப்புநிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக புதிய அரசமைப்பில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய கூட்டாட்சி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இப்போது பொருளாதார ரீதியில் வீழ்ச்சிகண்டுள்ள இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு இந்தியாவின் பங்களிப்பு மிக அவசியமாகும். அதுமாத்திரமன்றிதமிழகத்தோடுபொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும், தொடர்பாடலையும் கட்டியெழுப்பாமல் பொருளாதார வளர்ச்சியை அடைவதென்பது இலங்கைக்கு சவாலானதாகவே இருக்கும். ஆகவே இலங்கை மீது கணிசமான அழுத்தத்தைப் பிரயோகித்து, தமிழர்கள் விரும்பும் மேற்படி தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும் என நம்புகின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக்கடிதத்தில்இரண்டுவிடயங்கள்மிக முக்கியமானவை. முதலாவதுநல்லாட்சிக்கால அரசமைப்புவரைவை,அரசமைப்பின்13ஆவது திருத்தத்திலும் பார்க்க மிகப் பலவீனமானது என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது, இந்தியாவின் ஒன்றிய ஆட்சியாளர்களுக்குஅழுதம்கொடுத்துஅவர்கள் மூலமாகஇலங்கைஆளும்தரப்புக்குஅழுத்தம் கொடுக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவின்பெரும்பாலானமாநிலங்களைத் தன்வசப்படுத்தி பெரும் பலத்தோடு புதுடில்லியில் இருக்கும் பாராதீய ஜனதாக் கட்சியும் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும் திமுகவும் எதிரிகள், இரு துருவங்கள். அப்படியிருக்கும்போது திமுக அழுத்தம் கொடுத்து அதைக் கேட்டு பாஜக ஆளும்தரப்பு தனது அயலுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவது எந்தளவிற்குச் சாத்தியம்? இறுதிப் போர் நடந்துகொண்டிருந்தபோது திமுக ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் பங்காளியாக இருந்தது. அப்போதே அதனால் இந்திய அயலுறவுக் கொள்கையில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்த முடியவில்லை. இப்போது எதிர்த்தரப்பில் இருந்துகொண்டு அது நடக்கும் என்று எதிர்ப்பார்ப்பது கானல்நீர்தான்.

அப்படி நடக்க வேண்டுமானால் ஒட்டு மொத்த தமிழ்நாடுமே அதற்காகக் கிளர்ந்தெழ வேண்டும். இப்போதிருக்கும் நிலையில் திமுக ஆட்சியாளர்கள் அத்தகைய ஓர் அரசியலை நோக்கி நகர்வார்கள் என்று கனவிலும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், புதுடில்லியின் அரசியல் ஈழத் தமிழர்களுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் நிலையை நோக்கி நகர்வதைத் தடுப்பதற்கு அது உதவக்கூடும்.

அதேநேரத்தில் இலங்கையில் வீடு, சங்கு மீண்டும் தொடங்கியிருக்கும் தமது ஹனிமூனில் முதல்சந்திப்பாக கொழும்பில் உள்ள இந்திய உயராணையரிடம் டிசெம்பர் 23 செல்கின்றன. அரசியல் தீர்வு விடயத்தில் கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்கிற கோரிக்கையுடனேயே அவர்களும் அங்கு செல்கின்றனர். ஆக, மொத்தத்தில் ஈழத் தமிழர்களுக்கான இன நலன் என்று கூறிக்கொண்டுவடக்குகிழக்கில்முகிழ்த்திருந்த கட்சிஅரசியல்பிளவுகள்இப்போதுகடல்தாண்டி இந்தியக் கரையையும் அடைந்திருக்கின்றன என்பதற்கப்பால் இந்தச் சந்திப்புக்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பதுதான் யதார்த்தம்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு புதிதாகக் கொண்டுவரப் போவதாகத் தெரிவிக்கப்படும் அரசமைப்பு வரைவில் என்ன இருக்கப் போகிறது என்று இந்தியாவிற்கே தெரியாத நிலையில் இந்தச் சந்திப்புக்கள் எல்லாம் இலங்கையில் இந்திய நலன்களைப் பேணுவதற்கு உதவும் சந்திப்புக்களே தவிர, ஈழத் தமிழர் அரசியல் நலனுக்கு நன்மை பயக்குபவை அல்ல. ஜேவிபி செயலாளர் ரில்வின் சில்வா விரைவில் இந்தியா செல்லவுள்ளார். அப்போது தம்மிடம் உள்ள அரசியல் வரைவுத் திட்டத்தில் என்ன தீர்வு உள்ளடங்கவுள்ளது என்பதை அவர் புதுடில்லியிடம் விளக்கக்கூடும். அதன் பின்னரே இந்த விடயத்தில் என்ன அரசியல் காய் நகர்த்தல்கள் என்பது தெளிவாகும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பினால் இது தொடர்பான முன்னேற்பாடுகள்நடக்காதகாரணத்தினாலும் இந்த பேரிடருக்கான மிகப்பெரிய காரணங்களாக அமைந்துள்ளன.

நாட்டில் மிகப்பெரிய இடர்கள் வரும்போது மனித உயிர்களை காப்பதற்கும், அழிவுகளில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கும் படைக்களுக்கான பயிற்சிகள் இல்லை என்பதனை இந்த பேரிடர் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் படைகள்தான் இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது என்ற அத்தியாயம் இந்த நாட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ் என்பன இடர்கள் வரும் போது எவ்வாறு செயற்படுவது என்பதற்கான பயிற்சிகளை கொண்டிருப்பர். ஆனால் இந்த நாட்டில் அவர்கள் செயற்பட்டிருந்தாலும், அவர்களுக்காக திறன் வழங்கப்படவில்லை என்பதனையே கடந்த நாட்கள் தெளிவுப்படுத்தியுள்ளது.

நாட்டில் தென்பகுதிகளில் ஏற்படும் அழிவுகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம், செயற்பாடுகளின் வேகம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மிகக் குறைவாகவே இருக்கின்றது. அண்மையில் நான் நெடுந்தீவுக்கு சென்றிருந்த போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் என்னிடம் கண்ணீருடன் கூறினர். அவர்களுக்கான உதவித் தொகைகளை நிறுத்தியுள்ளதாகவும் கூறினர். இப்போதும் நெடுந்தீவுக்கான போக்குவரத்து சீரானதாக இல்லை. அந்த மக்களின் நிலப்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மற்றைய தீவுப்பகுதிகளில் வசிக்கும் மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பகுதிகளில் நடந்த பேரிடர்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

அரசுத் தலைவர் உரையாற்றும்போது கூறும் ஜனநாயகம், பெருந்தன்மை, மக்களுக்கான செயற்பாடு என்பன மிகப்பெரிய கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஆளும் கட்சிசார்பானவர்கள் அராஜகம் செய்யுமளவுக்கு நாட்டின் நிலமை காணப்படுகின்றது. கிராம அலுவலர்கள் பணியாற்றும்போது அரச நாடாளுமன்ற உறுப்பினர் தாக்குகின்றார். கிராம அலுவல்களைத் தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர்.

அரசுத் தலைவர் செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய பிரஜாசக்தி வறுமை ஒழிப்பு தேசிய இயக்கமானது தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றம், மாகாண சபைன் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களின் செயற்பாடுகளை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு என்ன பணி உள்ளது? ஆளும் கட்சியின் உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பு குழு தலைவர்களுக்கே அந்த உரிமைகள் உள்ளன. இப்படி இருந்தால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் எதற்கு? அதனை கலைத்துவிடுங்கள்.

கடந்த 60 ஆண்டுகளாக பொறுத்திருந்து தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். ஜனநாயக முறையில் நீங்கள் தெரிவு செய்து வந்தபின்னர்,நீங்கள்நினைப்பவர்களைஅரசுத் தலைவர்யினால் நியமிக்க முடியுமென்றால் இதில் என்ன ஜனநாயகம் இருக்கின்றது. இது வெளிப்படையான அராஜகமே. பிரஜா சக்தி உறுப்பினர்கள் மிகப்பெரிய அராஜகத்தில் ஈடுபடுகின்றனர். இந்த பிரஜா சக்திக்காக பிரதேசத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்டவரை இதற்காக நியமிக்கின்றது.

இந்த நாட்டில் தற்போது நடப்பது ஆளும்தரப்பின் ஜனநாயக நடைமுறையா? அல்லது தேசிய மக்கள் சக்தியின் அராஜகமா? நடக்கின்றது என்று கூறுங்கள். கடந்த ஆட்சியாளர்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தீர்கள். அவர்கள் ஆயுத ரீதியில் எமது மக்களை அராஜகம் மற்றும் இனப்படுகொலைகளை செய்தனர். அதனை மெதுவாக கண்ணுக்கு தெரியாத நூதனமான முறையில் சுற்றறிக்கைகள் மூலம் தேசிய மக்கள் சக்தி இன்னுமொரு மிகப்பெரிய இனப்படுகொலை மற்றும் இனவழிப்பை நாட்டில் செய்வதற்கு முயற்சிக்கின்றது.

கடந்த கால அராஜக ஆளும்தரப்புக்கள்கூட மக்கள் பிரதிநிதிகளை இயங்க இடமளித்தனர். அவர்களுக்கு கருத்துக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் முழுமையாகக் கருத்துக்கள் இல்லாமல்செய்யப்படுகின்றது. வன்மையான முறையில் நிலமையை ஏற்படுத்துகின்றீர்கள். மக்களுக்கான நல்லெண்ணம்,புரிந்துணர்வு இருக்குமாக இருந்தால் ஏன் இவ்வாறான வேலைகளை செய்ய வேண்டும். நாங்கள் நீதியான அரசையும், கௌரவமான அரசியல் பாரம்பரியத்தையுமே எதிர்பார்க்கின்றோம். உங்களைமாற்றுங்கள். மக்கள்பிரதிநிதிகளுக்கு மதிப்பளியுங்கள் - என்றார்.

## மலையகமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணியை பெற்றுக்கொடுத்து, அந்த மக்கள் அங்கே வாழ்வதற்குதேவையான வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சி 06ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பெண்களின் உழைப்பையும் கணக்கிலெடுப்போம்

'தித்வா' சூறாவளி ஏற்படுத்திய உடனடி அபாயங்களிலிருந்து மெதுவாக மீண்டு வர முயற்சிக்கும் நிலையில், இலங்கை இப்போது அதைவிடக் கடினமான மற்றும் நீண்டகாலப் பயணமான மறுசீரமைப்பை எதிர்கொள்கிறது. இந்தப் புயல் வீடுகள், பாலங்கள், சாலைகள் போன்ற உட்கட்டமைப்புகளை மட்டும் சேதப்படுத்தவில்லை. அது மனிதர்களின் அன்றாட வாழ்க்கை ஓட்டங்களையும், சமூகங்களின் இயங்கும் ஒழுங்கையும் குலைத்துள்ளது. இதனால் ஏற்கனவே விளிம்பு நிலையில் இருந்த பல குடும்பங்கள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. எனவே, மீட்பு என்பது கட்டடங்களை பழுது பார்க்கும் பணியோ, புதிதாக கட்டும் முயற்சியோ மட்டுமாக இருக்க முடியாது. அது மக்களின் உடல் மற்றும் மன நலன், சமூக பிணைப்புகள், குடும்ப மற்றும் பிராந்திய பொருளாதாரங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

இந்த மீட்புப் பயணத்தில், பெண்களின் பங்கு மிக முக்கியமானதாய் இருந்தும் பெரும்பாலும் அது கவனிக்கப்படாமல் போகிறது. பேரிடருக்கு முன்பும், பேரிடர் நேரத்திலும், அதன் பின்னரும், குடும்பங்களை ஒன்றாகத் தாங்கி நிறுத்திய முதன்மை சக்தியாக பெண்களே செயல்பட்டனர். குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ததும், முதியவர்களை கவனித்ததும், வீட்டுத் தேவைகளை நிர்வகித்ததும், சமூக உறவுகளை உயிர்ப்புடன் வைத்ததும் பெண்கள்தான். ஆனால் இந்தப் பணிகள், பெண்களின் இயல்பான கடமை எனக் கருதப்பட்டு, அதன் உண்மையான மதிப்பு மறைக்கப்படுகிறது.

சம்பளமில்லா வீட்டு மற்றும் பராமரிப்பு உழைப்பு, பெரும்பாலும் பெண்களால் மேற்கொள்ளப்படுவது, இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய ஆனால் அங்கீகரிக்கப்படாத பங்களிப்பாகும். இந்த உழைப்பினால்தான் மற்றக் குடும்ப உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ பொருளாதாரத்தில் ஈடுபட முடிகிறது; குடும்பங்கள் சீராக இயங்குகின்றன. ஆனால் இது சம்பளம் இல்லாததும், கணக்கில்கொள்ளப்படாததுமாக இருப்பதால், தேசியக் கொள்கைகளில் மதிப்பிடப்படுவதில்லை; பொருளாதாரத் திட்டமிடலில் கணக்கில் கொள்ளப்படுவதில்லை; உதவிகள், நலத் திட்டங்கள் வடிவமைக்கப்படும்போதுகூட பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது. தித்வா போன்ற பேரிடருக்குப் பிறகு, இந்தச் சம்பளமில்லா உழைப்பு மேலும் அதிகரிக்கிறது. குடும்பங்களை மலையாகத் தாங்கி நிறுத்தும் உணர்ச்சி உழைப்பும், நடைமுறை மீட்பு நடவடிக்கைகளும் பெண்களின் தோள்களில் கூடுதல் சுமையாக விழுகின்றன.

இலங்கை உண்மையில் உட்கட்டமைப்புகளை மட்டுமல்ல, சமூக அடித்தளங்களையும் மீண்டும் கட்டியெழுப்ப விரும்பினால், பெண்களின் இந்தப் பங்களிப்பை வார்த்தைகளில் மட்டும் அல்ல; கொள்கைகளின் வழியாகவும் அங்கீகரிக்கவேண்டும். இதற்கான ஒரு பயனுள்ள எடுத்துக்காட்டை சமீபத்தில் இந்தியாவின் சில மாநிலங்கள் வழங்கியுள்ளன. அங்கு, உத்தியோகபூர்வ வேலைவாய்ப்பில் இல்லாத பெண்களுக்கு மாதாந்திர பண உதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வயது வரம்பு, வருமானத் தகுதி, அரசு ஊழியர்கள், வரி செலுத்துவோர், கார் அல்லது அதிக நிலம் கொண்ட குடும்பங்கள் ஆகியவற்றுக்கு விலக்கு போன்ற தகுதிகள் விதிக்கப்பட்டுள்ளன. மாதத்திற்கு ஆயிரம் முதல் இரண்டாயிரத்து ஐந்நூறு இந்திய ரூபாய் வரையிலான இந்தத் தொகைகள், பெரிய மாற்றத்தை தனித்தனியாக ஏற்படுத்தாவிட்டாலும், ஒரு முக்கியமான செய்தியை அளிக்கின்றன. அதாவது, சம்பளமில்லா வீட்டு மற்றும் பராமரிப்பு உழைப்புக்கும் பொருளாதார மதிப்பு உண்டு என்பதையும், பெண்களை ஆதரிப்பது குடும்பங்களையும் சமூகங்களையும், இறுதியில் தேசிய பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும் என்பதையும் இந்தத் திட்டங்கள் ஒப்புக்கொள்கின்றன. மேலும், இவை நிபந்தனை இல்லாத உதவிகள் என்பதால், பெண்கள் தங்கள் உற்பத்தித் திறனை நிரூபிக்கவோ, வேலை தேடவோ வேண்டிய கட்டாயம் இல்லை.

இலங்கையிலும் பெண்களின் சம்பளமில்லா உழைப்பை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் பற்றிப் பல தசாப்தங்களாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. கொள்கை வகுப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள், பொருளாதார நிபுணர்கள், பெண்கள் வழங்கும் கோடிக்கணக்கான மணிநேர உழைப்பைச் சுட்டிக்காட்டி வருகின்றனர். ஆனால் இந்த உரையாடல்கள் பெரும்பாலும் செயலில் மாற்றமாக மாறவில்லை. தித்வா வுக்குப் பிந்தைய காலம், இந்தச் சோம்பேறித் தன்மையை மாற்றக்கூடிய ஒரு முக்கிய வாய்ப்பாக அமைகிறது. சமூகங்களையும் பொருளாதாரங்களையும் அடிப்படையிலிருந்து மீண்டும் கட்டியெழுப்பவேண்டும் என்றால், பெண்களின் சம்பளமில்லா உழைப்பை ஒரு தனிப்பட்ட கடமையாக அல்ல; ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதவேண்டும்.

இதன் பொருள், இலங்கை இந்தியாவின் மாதிரியை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதல்ல. நாட்டின் பொருளாதார திறன், மக்கள் தொகை, நிர்வாக அமைப்புகள் வேறுபட்டவை. ஆனால் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பல நடைமுறை நடவடிக்கைகள் எடுக்க முடியும். தேசிய பொருளாதாரத் திட்டமிடலில் சம்பளமில்லா பராமரிப்பு உழைப்பை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தல், வீடுகளை நிர்வகிக்கும் பெண்களுக்கு குறித்த நிவாரணங்கள் அல்லது சலுகைகள் வழங்குதல், வீட்டிலிருந்தே சுயதொழில் செய்ய விரும்பும் பெண்களுக்கு அரசு நிறுவனங்கள் வழியாக ஆதரவு திட்டங்களை உருவாக்குதல், பயிற்சி மற்றும் டிஜிட்டல் அணுகலை விரிவுபடுத்துதல், குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, சுகாதார சேவைகளை மேம்படுத்தி பெண்களின் சுமையை குறைக்கும் சமூக மட்ட ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துதல் போன்றவை அதில் அடங்கும்.

இத்தகைய நடவடிக்கைகள் சமீபத்திய பேரிடரிலிருந்து குடும்பங்களை மீட்டெடுக்க உதவுவதோடு மட்டுமல்ல; நீண்ட காலமாக நிலவி வரும் பாலின அடிப்படையிலான சமத்துவமின்மைகளையும் சீர்செய்யும். பெண்களின் பங்களிப்பை அங்கீகரிப்பது கருணை அல்ல. அது சீரான பொருளாதாரத் திட்டமிடல். பெண்கள் ஆதரிக்கப்படும்போது, குடும்பங்கள் விரைவாக நிலைபெறுகின்றன; சமூகங்கள் ஒருங்கிணைந்த முறையில் மீள்கட்டமைக்கப்படுகின்றன; தேசிய பொருளாதாரம் அடித்தளத்திலிருந்து வலுப்பெறுகிறது.

தித்வா வுக்குப் பிந்தைய மீட்புப் பாதையை வரையறுக்கும் இந்த நேரத்தில், நாம் நினைவில் கொள்ள வேண்டியது ஒன்றுதான். மீள்கட்டமைப்பு என்பது அழிந்தவற்றை மாற்றுவது மட்டுமல்ல; இதுவரை புறக்கணிக்கப்பட்டவற்றை மீண்டும் சிந்தித்து, சரிசெய்வதுமாகும். அந்தச் சிந்தனையின் மையத்தில் பெண்களின் மறைக்கப்பட்ட உழைப்பு இருக்கவேண்டும்.

# மூன்று சட்டங்களில் சபாநாயகர் கையெழுத்து

சமூகப்பாதுகாப்புஉதவுதொகைஅறவீடு(திருத்தச்) சட்டமூலம், பந்தய, சூதாட்ட விதிப்பனவு(திருத்தச்) சட்டமூலம் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் ஆகிய மூன்று சட்டமூலங்களை சான்றுரைப் படுத்தியிருப்பதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே அவர் இதனை சபைக்கு அறிவித்தார்.

சமூகப்பாதுகாப்புஉதவுதொகைஅறவீடு(திருத்தச்) சட்டமூலமானது, 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (திருத்தச்)சட்டத்தைத்திருத்துவதைபிரதானநோக்காகக் கொண்டதாகும். இச்சட்டமூலம் 09.10.2025 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 05.12.2025 அன்று நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், 05.12.2025 நிறைவேற்றப்பட்ட சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக 2ஆவது வாசகம் திருத்தப்படுகிறது. இதற்கமைய, 2023 ஏப்ரல் 1ஆம் திகதி தொடக்கம் 2025 ஒக்டோபர் 1 வரையான காலப்பகுதிக்கு மட்டும் ஏற்புடையதான பத்து சதவீதத்திலான மொத்தச் சேகரிப்பை மட்டுப்படுத்துவது,

2025 ஒக்டோபர் 01 முதல் குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலில் அல்லது சூதாட்டத் தொழிலில் ஈடுபடும் ஆட்களிடமிருந்தான மொத்தச் சேகரிப்பு அறவீட்டை 18 சதவீதமாக அதிகரித்தல், இலங்கைப் மக்களிடமிருந்து கெசினோ நுழைவு அறவீட்டை நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்தல் என்பன இத்திருத்தத்தின் நோக்கமாகும்.

அதேநேரம், 14.11.2025 அன்றுநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு05.12.2025அன்றுநிறைவேற்றப்பட்ட செயல்நுணுக்கஅபிவிருத்திகருத்திட்டங்கள்(திருத்தச்) சட்டமூலமானது, 2008ஆம்ஆண்டின்14ஆம்இலக்க செயல்நுணுக்கஅபிவிருத்திகருத்திட்டசட்டமூலத்தை திருத்துவதற்கானசட்டமூலமாகும். இத்திருத்தமானது, திட்டங்களை அடையாளம் காணுவதற்கான புதிய நடைமுறையாக அதிகபட்ச விலக்களிப்புக் காலத்தை 25 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாகக் குறைத்தல், உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தை ஒரு செயல்நுணுக்க அபிவிருத்திக்கருத்திட்டமாக அடையாளங்காண்பதன்மேல், இலங்கை முதலீட்டுச் சபையானது அத்தகைய கருத்திட்ட உத்தேசத்தை நிகழ்வுக்கு முன்னரான செலவு நன்மைப்பகுப்பாய்வுக்காக நிதியமைச்சுக்கு ஆற்றுப்படுத்துதல்,

அத்தகைய நிகழ்வுக்கு முன்னரான செலவு நன்மைப்பகுப்பாய்வை நிறைவேற்றுதல், இணங்கியொழுகாமையின் போது இச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகள், சலுகைகள் அல்லது வா விடுமுறை எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் மட்டுப்படுத்துதல் அல்லது சம்பந்தமாகஏற்பட்டஇழப்பைஅறவிடுவதற்குநிருவாகத் தண்டங்களைவிதித்தல், வரிச்செலவினங்கள்மீதான வருடாந்த அறிக்கையொன்றினை வெளியிடுவதற்கு நிதி அமைச்சினைத் தேவைப்படுத்துவதன் மூலம் வெளிப்படைத்தன்மையைஉறுதிப்படுத்துதல்என்பன இந்தத் திருத்தங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கமைய, குறித்த மூன்று சட்டமூலங்களும் முறையே 2025ஆம் ஆண்டு 24ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமாகவும், 2025ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமாகவும், 2025ஆம்ஆண்டின்26ஆம்இலக்கசெயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமாகவும் அமுலுக்கு வருகின்றன.

# மேல்மாகாணத்தில் 1500 பட்டதாரிகளுக்கு ஆளும்தரப்பு நியமனம் வழங்காது அநீதி

## எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

மேல் மாகாணத்தில் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 1500 பட்டதாரிகள் காணப்படுகின்றனர். இவர்களை மேல் மாகாண ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்து கொள்ள முடியும். அவ்வாறு வாய்ப்பிருந்தும் ஆளும்தரப்பு இவ்விடயத்தில் அவர்களுக்கு அநீதியிழைப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேல் மாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளால் புதன்கிழமை கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இந்த 1,500 பட்டதாரிகள் விவகாரத்தில் ஆளும்தரப்பு அநீதியிழைத்துள்ளது. வெற்றிடங்கள்காணப்படுகின்ற போதிலும்,நியமனங்களைவழங்குவதில்ஆளும்தரப்பு இழுத்தடிப்புக்களை செய்கிறது. உண்மையில் இவர்களின் நியமனம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியாகும் காலம் 2025 டிசம்பர் 31 முடிவுக்கு வருகின்றது.

எனவே இந்த வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து, இத்தரப்பினரை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்து கொள்ளுமாறு ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுக்கிறேன். தொடர்ச்சியாக ஆளும்தரப்பு இந்த ஆட்சேர்ப்பை காலம் தாழ்த்தி வருகின்றது. பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டிய தகுதியான இடத்தை வழங்காது இழுத்தடிக்கும் வேலையைச் செய்து வருகிறது.

நாட்டில் 35,000 வேலையில்லாப் பட்டதாரிகள் காணப்படுகின்றனர். அரசுத் தலைவர் கூறியது போல், ஆசிரியர் போட்டிப் பரீட்சையிலும் இவர்கள் சித்தியடைந்துள்ளனர். பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்க ஆளும்தரப்பு தயக்கம் காட்டி வருகிறது. தற்போதைய ஆளும்தரப்பு பட்டதாரிகள் விடயத்தில் ஏன் இந்த விதமாக எதிர்க்கும் நிலைப்பாட்டில் இருந்து வருகிறது என்பதை புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும் வரை ஆளும்தரப்பு இவ்வாறு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்த தொழில்களை வழங்கும் விடயத்தில் ஏற்படும் தாமதம் இந்த பட்டதாரிகளின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களாகும். இத்தரப்பினருக்கு நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டும். அதுவரை ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் இவர்களுக்காக முன்நிற்கும் என்றார்.

# ரூ. 500 பில்லியனுக்கான குறைநிரப்பு பிரேரணை

## நாடாளுமன்றில் நேற்று முன்வைப்பு

திடீர் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு மதிப்பீடு நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது .

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியதையடுத்து, பிரதமர் ஹரிணி அமரசூரிய திடீர் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு மதிப்பீட்டை சபையில் சமர்ப்பித்தார்.

இந்நிலையில் இன்று வெள்ளிக்கிழமை 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு மதிப்பீடு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# மீண்டும் மண் சரிவு எச்சரிக்கை

மழையுடனான காலநிலை குறைவடைந் தமையால் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாகப் பதிவான மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைந்தமையால் மண்சரிவு அபாய எச்சரிக்கைகள் தளர்த்தப்பட்டன. எவ்வாறிருப்பினும் புதன்கிழமை கண்டி - உடுதும்பர பிரதேசத்தில் 200 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனவே மீண்டும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கண்டியில் தொலுவ, உடுதும்பர, மினிப்பே மற்றும் மெததும்பர பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தில் மத்துரட்ட, நில்தண்டாஹேன்ன, ஹங்குராங்கெத்த மற்றும் வலப்பனை பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் இவ்வாறு மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த வாரங்களில் பெய்த மழையின் காரணமாக குறித்த பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் மண்சரிவிற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

பெரும்பாலான இடங்களில் வீடுகள் மற்றும் நிலங்களில் விரிசல்கள், பிளவுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இடங்களில் நிச்சயம் மண்சரிவு, மண்மேடு சரிந்து விழுதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் ஏற்படக் கூடும். பதுளை, கேகாலை, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களிலும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளன. அந்த மாவட்டங்களிலும் மீண்டும் இரண்டாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 5 மாவட்டங்களில் 32 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 3 மாவட்டங்களில் 18 செயலகப்பிரிவுகளுக்கு மூன்றாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கண்டி - உடுதும்பர பிரதேசம் குறித்து உரிய அவதானம் செலுத்தப்பட வேண்டும். கடந்த வாரங்களில் இந்த பிரதேசத்தில் பாரியளவிலான பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன. எனவே இது தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார்.

காலநிலை

இதேவேளை கிழக்கில் அலை வடிவிலான தாக்கத்தின் காரணமாக, தீவின் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தற்போது காணப்படும் மழை நிலமை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும். கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும். இப்பகுதிகளில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்குச் சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு (40-50) கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பேரிடர் நிலையையும் எதிர்க்கட்சிகள் அரசியலுக்குப் பயன்படுத்துகின்றன

## பிரதி அமைச்சர் யெஜக்கொடி குற்றச்சாட்டு

அரசியல் தீர்மானங்களுக்கமைய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்படவில்லை. தொழில்நுட்ப காரணிகளை அடிப்படையாகக் கொண்டே நீர்ப்பாசனத் திணைக்களம் வான்கதவுகளை திறந்தது. எதிர்கட்சியினர் இடர் நிலமையையும் தமது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் அன்டன் ஜயகொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலமை குறித்த சபை ஒத்திவைப்புவிவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் நிலமையினால் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். ஏற்பட்ட உயிரிழப்பை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வழிகளில் உதவிவழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நெருக்கடியான நிலையில் இருந்து நாட்டையும், நாட்டுமக்களையும் விரைவாக மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய முப்படையினர், பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மலையகத்தில் அடிக்கடி மண்சரிவு பாதிப்பு ஏற்படும் அச்சுறுத்தல் காணப்படுகிறது. இவ்வாறான பின்னணயில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆலோசனைக்கு அமைவாகவே இனி மலையகத்தில் குடியிருப்புக்களை அமைக்கவேண்டும். தற்போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பாதுகாப்பான இடங்களில் புதிய குடியிருப்புக்கள் கட்டித் தரப்படும்.

அரசியல் தீர்மானங்களுக்கமைய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்படவில்லை. தொழில்நுட்ப காரணிகளை அடிப்படையாகக் கொண்டே நீர்பாசனத் திணைக்களம் வான்கதவுகளைத் திறந்தது. எதிர்கட்சியினர் பேரிடர் நிலமையையும் தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சியினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். வான்கதவுகள் திறக்கப்பட்டமைக்கும், அரசியல் தீர்மானத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது. காலநிலை தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நீர்பாசனத் திணைக்களம் செயற்படுகிறது என்றார்.

# முகத்தைப் பார்த்தாலே தெரியும் அவர் மது அருந்துபவரா என்று

## ரன்வல விடயத்தில் சாமர எம்.பி. கருத்து

பேரிடரிற்குள் பேரிடர் ஒன்றை ஏற்டுத்திக்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்க ரன்வல, மது அருந்துபவரா இல்லையா என்பதை என்பதை அவரது முகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் சட்டம் யாருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத்தசநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெற்ற பேரிடரில் பதுளை மாவட்டமே அதிகம் பாதிக்கப்பட்டது. அங்கு தற்போது மூடப்பட்ட பாதைகள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் சில இடங்களில் பஸ் வண்டிகள் பயணிப்பதில் அவதானம் தேவையாகவுள்ளது. அதனால் பயணிகள் பஸ்களில் இருந்து இறங்கி, ஏற்றப்படும் நிலையே இருந்து வருகிறது. அந்தப் பாதைகளைச் மீளதிருத்தி அமைப்பதற்கு 500 பில்லியன் ரூபா போதாது. அதனால் இதற்கு ஆளும்தரப்பு மேலும் நிதி ஒதுக்கிக்கொள்ள வேண்டி ஏற்படும்.

அத்துடன் பதுளை மாவட்ட அனர்தம் தொடர்பில் கலந்துரையாட அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு அரசுத் தலைவர் வந்தபோது, எதிர்க்கட்சியில் நான் மாத்திரமே அதில் கலந்துகொண்டிருந்தேன். அரசுத் தலைவருக்கு பின்னால் நான் இருந்ததை அரசுத்தலைவருக்கு தெரியாது. யாரும் அரசுத் தலைவருக்கு தெரிவித்திருக்கவும் இல்லை. கூட்டம் முடிந்த பின்னர்தான் அரசுத்தலைவர் என்னை கண்டு, நீங்கள் இருந்தீர்களா எனக் கேட்டார். இதுதான் உண்மை நிலை. உதவி, ஒத்தாசை வழங்குமாறு எங்களைக் கேட்கிறார்கள். ஆனால் அங்கு சென்றால், ஒரு சதத்துக்கேனும் எங்களைக் கண்டு கொள்வதில்லை.

அதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரன்வல பேரிடரிற்கு மத்தியில் பேரிடர் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளார். ஏற்கனவே பேரிடர் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு சபாநாயகர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். தற்போது மீண்டுமொருமுறை பேரிடரில் சிக்கிக்கொண்டுள்ளார்.

அவர் மது அருந்தியுள்ளாரா என பார்ப்பதற்கு பலூன் ஊதிப்பார்க்க தேவையில்லை. மது அருந்துபவரின் முகத்தைப் பார்த்தாலே போதுமானது. அதனால் நாடாளுமன்ற உறுப்பினர் ரன்வல பலூன் ஊதிப்பார்க்கச் சொல்ல தேவையில்லை. அதனால் சட்டம் யாருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25ஆயிரம் வழங்கும் நடவடிக்கையில் தேசிய மக்கள் சக்தியின் உத்தியோகபூர்வமற்ற கிராம சேவகர் ஒருவரும் இருக்கிறார். இந்த நடவடிக்கையை முறையாக மேற்கொள்ள கிராம சேவகருக்கு இவர் இடமளிக்காமல், அவர் தெரிவிப்பவருக்கு மாத்திரமே வழங்குமாறு கிராம சேவகருக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

அவரின் பரிந்துரை இல்லாமல் இந்தப் பணத்தை வழங்க முடியாது எனத் தெரிவிக்கிறார்கள். அதனால் ஆளும்தரப்பு இந்தளவு கீழ்மட்டத்துக்கு செல்லாது பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அந்த பணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுகக வேண்டும் என்றார்.

# வாக்குறுதியளித்தபடி உதவி தரத்தவறின் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்

## மரிக்கார் எம்.பி. எச்சரிக்கை

அரசுத் தலைவர் அநுரகுமார நத்தார் தாத்தாவை போன்று உதவிக்கான வாக்குறுதிகளை வாரி வழங்கியுள்ளார். தேர்தல் காலத்தில் மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கினீர்கள். அதனை தற்போது மறந்து விட்டீர்கள். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். அவற்றை முறையாக செயற்படுத்துங்கள் இல்லையேல் விளைவு பாரதூரமானதாக அமையுமென ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலமை குறித்த சபை ஒத்திவைப்புவிவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடரால் சேதமடைந்த வீதிகள், பாலங்கள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை சீரமைக்க 250 பில்லியன் ரூபா இந்த குறைநிரப்புபிரேரணையில் ஒதுக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான தெரிவுக்குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியது. இதன்போது வீதி அதிகார சபைக்கு வீதிகளை புனரமைப்பதற்கு மாத்திரம் 190 பில்லியன் ரூபா தேவை என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தொடருந்து திணைக்களத்தின் நட்டம் இன்றளவில் மதிப்பிடப்படவில்லை. இலங்கை மின்சார சபை 20 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் குறைநிரப்பு பிரேரணையில் அது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. 100 மில்லியன் டொலர் கடன் பெற எதிர்பார்த்துள்ளதாக இலங்கை மின்சாரசபை குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு கடன் பெற்றால் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க நேரிடும்.

அரசுத் தலைவர் அநுரகுமார நத்தார் தாத்தாவை போன்று உதவிக்கான வாக்குறுதிகளை வாரி வழங்கியுள்ளார். தேர்தல் காலத்தில் மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கினீர்கள். அதனைத் தற்போது மறந்து விட்டீர்கள். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். அவற்றை முறையாக செயற்படுத்துங்கள் இல்லையேல் விளைவு பாரதூரமானதாக அமையும்.

கொழும்பு மாவட்டத்தில் பெருமளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவிலானோருக்கு முழுமையாக உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. கொழும்பில் தேங்கியுள்ள குப்பைகள் கூட முழுமையாக அகற்றப்படவில்லை. இந்த பேரிடர் நிலமையின்போது ஆளும்தரப்பு தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டது. தற்போதும் அவ்வாறே செயற்படுகிறது. எவரது ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டது. இந்த நிதி வழங்கலிலும் பல முறைகேடுகள் காணப்படுகின்றன. இந்தக் கொடுப்பனவை பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன் வழங்குங்கள் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## மலையகமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையக தோட்ட மக்கள் அங்கிருந்து வெளியேறி முகாம்களிலும்பாடசாலைகளிலும்தங்கிவரும் நிலையல், அவர்களுக்கு எந்த வசதியும் செய்துகொடுக்காமல் தற்போது அவர்களை தங்களின் வீடுகளுக்கு செல்லுமாறு ஆளும்தரப்பு தெரிவித்து வருகிறது. தேசிய கட்டட ஆராச்சி நிறுவனத்தின் அறிக்கைக்கு அமையவே அவர்கள் தங்களின் வீடுகளைவிட்டு முகாம்களுக்கு வந்தார்கள். அதனால் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் முறையான அறிக்கையைப் பெற்றுகொண்ட பின்னரே அந்த மக்களை அவர்களின் இருப்பிடங்களுக்கு அனுப்புவது பொருத்தமாகும்.

வேவெண்டன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் காமினி திஸாநாயக்க பாடசாலைகளில் இருக்கிறார்கள். அவர்களை தற்போது வேறு பாடசாலைகளுக்கு செல்லுமாறு அல்லது தொண்டமான் பயிற்சி நிலையத்துக்கு அல்லது வீடுகளுக்குச் செல்லுமாறு தெரிவிக்கிறார்கள். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த மக்களின் நிலைமையைப் புரிந்து செயற்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் மலையகத்தில் பல பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

மேலும் வரவு செலவு திட்ட விவாதத்தின்போது, மலையக மக்களுக்கு தனியானவீடுஅமைத்துக்கொடுக்கவேண்டும் என ஆளும்தரப்பில் இருக்கும் அனைவரும் தெரிவித்து வந்தார்கள். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோன்று மலையக மக்களுக்கு 7 பேர்ச் காணியை பெற்றுக்கொடுத்து, அந்த மக்கள் அங்கே வாழ்வதற்குத் தேவையான வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும். மாறாக நாங்கள் மலையகத்தைவிட்டு யாழ்ப்பாணத்துக்கோ, மட்டக்களப்புக்கோசெல்வதற்குதயார்இல்லை. மலையகம் எமது தாயகம். நாங்கள் எமது தாயகத்தில் இருப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்துதரவேண்டும்.

தோட்டக்கம்பனிகளுடன் கலந்துரையாடி இந்தக் காணிகளைப் பெற்றுக்கொடுக்க ஆளும்தரப்பு முயற்சிக்கவேண்டும். எமது காலத்தில் அதனை மேற்கொள்ள நாங்கள் முயற்சித்தோம். அது சாத்தியமாகவில்லை. அதனால் அதனை தற்போது நீங்களாவது செய்யுங்கள். நாட்டில் இன்று தேயிலை, இறப்பர் போன்றவை ஒரு லட்சத்தி 3 ஆயிரம் ஹெக்டயர்களில் பயிர்ச் செய்யப்படுகின்றன. அகவே பெருந்தோட்ட மக்களுக்கு அதிலே 7பேர்ச்காணிஒதுக்குவதாகஇருந்தால், வெறும் 5 ஆயிரம் ஏக்கர் காணியே தேவைப்படுகிறது. அதனை ஒதுக்கிக்கொடுப்பதால் எந்த நட்டமும் ஏற்படப்போவதில்லை. அந்த மக்களும் இந்த நாட்டு மக்களே என ஆளும்தரப்பில் இருக்கும் 159 பேரும் பேசி இருக்கிறார்கள். அதனால் அந்த மக்களுக்கு காணிகளை பிரித்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், இந்த சமூகம் ஒதுக்கப்பட்ட சமூகமாக மாறிவிடும்.

அதேநேரம் பேரிடரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு ஆளும்தரப்பு வழங்கிய உதவிகளைவிட வெளிமாவட்டங்களில்இருந்து அதிகமான உதவிகள் கிடைக்கப்பெற்றன. அவர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

## யாழ். தையிட்டி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுடன், பிரதேச சபையின் உறுப்பினர்களால் தையிட்டியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது.எரிவாயு விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. புதிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதென அயலுறவுத்துறை,வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்புவிவாதத்தில்உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர்நிலைமையில்இருந்துநாட்டுமக்களை பாதுகாப்பதற்கு அரச இயந்திரம் சிறந்த முறையில் செயறபட்டுள்ளது. நவம்பர் 27 பேரிடர் நிலமை மிக மோசமாக பாதிக்கப்பட்டது. நவம்பர் 28 நாட்டில் அவசரகால நிலமை பிரகடனப்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பதற்கு முப்படையினரும், பொலிஸாரும் அர்ப்பணிப்புடன் செயறபட்டார்கள்.

நவம்பர் 28 பிரதமர் தலைமையில் இராஜதந்திர பிரநிதிகளை அழைத்து பேச்சு நடத்தினோம். இந்தியாவில் உள்ள இலங்கைக்கான உயராணையர் நிகழ்நிலையி (ஒன்லைன்) கலந்துரையாடலில் பங்குப்பற்றினார்.இலங்கைக்குஒத்துழைப்புவழங்குமாறு சர்வதேசத்திடம் வலியுறுத்தினோம். ஆகவே ஆளும்தரப்பு என்ற அடிப்படையில் பேரிடர் நிலமையைசிறந்தமுறையில்முகாமைத்துவம் செய்துள்ளோம்.

பேரிடர் நிலமை தீவிரமடைந்து ஆறு மணித்தியாலத்துக்குள் இந்திய ஆளும்தரப்புமீட்புபணிக்காகஇரண்டு ஹெலிகொப்டர்களையும்,மீட்புப்பணியாளர்களையும் அனுப்பி வைத்தது. அதேபோல் பாக்கிஸ்தான் ஆளும்தரப்பும் ஹெலிகொப்டரையும், உதவிப் பொருட்களையும் வழங்கியது. 24 மணித்தியாலத்துக்குள் சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்கின. ஆகவே நாடு என்ற ரீதியில் உலக நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியா - பாகிஸ்தான் இலங்கை விவகாரத்தில் இணக்கமாகவே செயற்பட்டன. இன்றும் அவ்வாறே காணப்படுகிறது. அதேபோல் உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கையின் பேரிடர் நிலமைக்கு அனுதாபம் தெரிவித்தார்கள். இலங்கை தனிமைப்படவில்லை என்று உலக நாடுகள் நம்பிக்கையளித்தன. அதேபோல்சர்வதேசநிதி நிறுவனங்களும் இலங்கைக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கியுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சிவில் அமைப்புக்களும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். மக்களும் தனிப்பட்ட முறையில் பிறிதொருவருக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.அனர்த்த நிலமையின் போது இலங்கையில் பல இலட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருந்தார்கள். ஒருவருக்கு கூட எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இது பெரும் வெற்றியாகும்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவியளிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த பேரிடரினால் முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒருசில பகுதிகளில் உதவி வழங்கலின்போது குறைபாடுகள் காணப்படலாம். அவற்றை ஆராய்ந்து தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். அதனை விடுத்து அரசியல் செய்யக் கூடாது.

நெருக்கடியான நிலையின்போது எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். ஒரு சிலர் மாத்திரம் தான் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். அவர்களை கருத்திற்கொள்ளப் போவதில்லை. சுற்றுலாத்துறைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. டிசெம்பர் மாதம் முதல் காலப்பகுதியில் மாத்திரம் 93 ஆயிரம் பேர் நாட்டுக்கு வந்துள்ளார்கள். இந்தாண்டு மாத்திரம் நாட்டுக்கு 22 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாபயணிகள் வருகைத்தந்துள்ளார்கள்.

தற்போதைய பேரிடர் நிலமையினால் 2026 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்படும், எரிவாயு விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் என்று எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களை அச்சமடையச் செய்ய முயற்சிக்கிறார்கள்.இது மிகவும் கீழ்த்தரமானதொரு செயறபாடு என்றே குறிப்பிட வேண்டும்.

பொருளாதாரம் உறுதியாக உள்ளது. வீழ்ந்தாலும் சிறந்த முறையில் மீண்டெழுவோம். அதற்கான சக்தி எமக்கு உள்ளது. எரிவாயு விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஓமான் நிறுவனத்தை காட்டிலும் .15 டொலர் குறைவான விலைக்கு புதியநிறுவனம்ஒன்றுமுன்னிலையாகியுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் 05 ஆம் திகதி முதலாவது எரிவாயு கப்பல் நாட்டுக்கு வரும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பொய்யுரைக்கவேண்டாம் என்றார்.

## வட-கிழக்கிற்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தித்வா' சூறாவளி தாக்கத்தினால் மத்திய மாகாணம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான மற்றும் சிறு வீதிகள், பாலங்கள்,தொடருந்து வீதிகள், பாலங்கள்மிகமோசமாகசேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள ஏ மற்றும் பி கட்டமைப்பிலானவீதிகள்சேதமடைந்துள்ளன. அண்ணவளாக 1450. 6.4 கிலோமீற்றர் தூர வீதிகள் சேதமடைந்துள்ளன. மத்திய மாகாணத்தில் பெருமளவிலான வீதிகள் சேதமடைந்துள்ளன. மலைகளுக்கு நடுவில் வீதிகளை அமைத்ததன் விளைவையே நாடு இன்று எதிர்கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்தியின் போது எதிர்க்கால திட்டமிடல் குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும். சேதமடைந்த வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 69 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சூறாவளி தாக்கத்தால் தொடருந்து திணைக்களம் பில்லியன் கணக்கில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. தொடருந்து பாதைகள், பாலங்கள், சமிஞ்சை கோபுரங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளன. மலையக தொடருந்து பாதையில் தொடருந்து வீதியின் இருப்புகள் மாத்திரமே மிகுதியாகியுள்ளன. தொடருந்து பாலங்களை புனரமைப்பதற்கு மாத்திரம் 6 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சேதமடைந்த தொடருந்து பாதைகளை விரைவாகபுனரமைப்பதற்குரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.இராணுவத்தினர் முழுமையானஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்குக்கான தொடருந்து சேவைகள் 2026.01.01 ஆம் திகதி முதலும், தலைமன்னாருக்கானதொடருந்துசேவைகள் 2026 பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்தும் முழுமையாக ஆரம்பிக்கப்படும்.

மலையகத்துக்கானதொடருந்துசேவையை ஆரம்பிக்கும் பணிகள் துரிதப்படுதப்படுத்தப்பட்டுள்ளன. பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு மற்றும் இழப்பீடு வழங்கப்படுகிறது. இந்த நெருக்கடியான நிலமையில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும்அதனை விடுத்து அரசியல் இலாபம் தேடக்கூடாது என்றார்.

## பெருந்தோட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. மலையகத்தில் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் தற்போது தோட்டத் தொழில்களில்ஈடுபடுவதில்லை. அவர்களுக்கு தோட்டக்கம்பனிகள் எவ்வித உதவிகளையும் வழங்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் ஆளும்தரப்புபெருந்தோட்டநிறுவனங்களுடன் பேச்சு நடத்தவேண்டும். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை மீண்டும் அவர்களின் வீடுகளுக்கு அனுப்புவது எந்தவகையில்பாதுகாப்பானதாகஅமையுமென ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆளும்தரப்பிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கை பேரிடர்களையும், அதனால் ஏற்பட்ட இழப்புக்களையும் நியாயப்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகின்றது. மண்சரிவுகள் மற்றும் வெள்ளத்தில் உயிரிழந்த சம்பவங்கள் இதற்கு முன்னரும் நேர்ந்துள்ளன என்று ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. அனர்த்த நிலமை குறித்து விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார் என்பதை ஆராய வேண்டும். இந்த விடயத்தில் அதிகாரிகள் மீது குற்றங்களை சுமத்தி தப்பித்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். இது அரசுத் தலைவர்யின் விடயத்துடன் தொடர்புடையது.

பேரிடர் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமிக்க சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த நிலமைக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார்? வளிமண்டலவியல் திணைக்களம் வழங்கிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா? என்பன தொடர்பில் ஆராய வேண்டும். உங்களுக்கு இது வேடிக்கையாக இருக்கலாம். பாதிக்கப்பட்ட மக்களுக்குதான் இதன் கவலை புரியும். இப்போதும் முகாம்களில் மக்கள் இருக்கின்றனர்.

ஒவ்வொரு உதவிகள் தொடர்பிலும் அரசுத் தலைவர் அறிவிக்கின்றார். அதனை எவ்வாறு கொடுப்பது என்று அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா? தொடர்ந்தும் மக்களை முகாம்களில் வைத்திருக்க முடியாது. அவர்களுக்கு உரிய வசதிகளை வழங்க வேண்டும். தோட்டங்களில் பணி புரியும் மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் என்ன? இந்த மக்களை மீள குடியேற்ற உங்களின் திட்டம் என்ன என்பதனை கூற வேண்டும்.

காணியொன்றை வாங்க 50 இலட்சம் ரூபா வழங்குவதாகவும், முழுமையாக வீடு அழிவடைந்திருந்தால் 100 இலட்சம் ரூபா வழங்குவதாகவும் அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இதனை எப்போது வழங்கப் போகின்றீர்கள். அனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதமாகப் போகிறது. அரசுத் தலைவர் இங்கு நாடாளுமன்றத்தில் பல்வேறு விடயங்களை அறிவிக்கின்றார். ஆனால் அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக செல்வதில்லை. கிராம சேவகரிடமே மக்கள் கேட்கின்றனர். அரச அதிகாரிகளுடன் முரண்படுகிறார்கள்.

பாடசாலைகள், விகாரைகளில் தங்கியிருக்கும் மக்களை அவர்களின் வீடுகளுக்கு அனுப்ப முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அனுமதி வழங்குமா? இது தொடர்பான நடவடிக்கைகள் எப்போது தொடங்கப்படும். ஆளும்தரப்பு வாக்குறுதி வழங்கியிருந்தால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

மலையகப்பகுதிகளில்பிரச்சினைஉள்ளது. மலையகத்தில் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் தற்போது தோட்டத் தொழில்களில் ஈடுபடுவதில்லை. அவர்களுக்கு தோட்ட கம்பெனிகள் எவ்வித நிவாரணங்களையும் வழங்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் ஆளும்தரப்புபெருந்தோட்டநிறுவனங்களுடன் பேச்சு நடத்தவேண்டும் - என்றார்.

## 5 தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் 23 செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் தமிழ் கட்சிகள் பலவற்றின் தலைவர்களை இந்தியா உயராணையர்ஒன்றாகச்சந்திக்கும்நிகழ்வாக இது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சிவானந்தன் நவநீதராஜா (வேந்தன்) மற்றும் சமத்துவ கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இந்தச் சந்திப்பில் இடம்பெறுகின்றனர்.

இந்தச் சந்திப்பில் ஆறு கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக தயாரித்த மனு ஒன்றும் இந்தியா உயராணையரிடம் கையளிக்கப்படவுள்ளதுஎன்றுதமிழ்க்கட்சிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு இலங்கை ஆளும்தரப்பிற்கு அழுத்தம் வழங்குவதோடு நிலையான சமஷ்டித் தீர்வினை அடைவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட உள்ளது.

தொடர்ச்சி 07ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## 5 தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வடபகுதியில் அமைந்துள்ள பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக விரிவாக்கப்படாமை மற்றும் காங்கேசன் துறைமுகத்தை வணிக நீதியான துறைமுகமாக செயல்படுத்துவது தொடர்பில் இந்தியாவின் அழுத்தத்தை இலங்கை ஆளும்தரப்பிற்கு வழங்குவது தொடர்பிலும் பேசப்பட உள்ளது.

தூதுவருடன் பேசப்படுகின்ற விடயங்கள் மனுவடிவில்தயாரிக்கப்பட்டுஆறு கட்சிகளின் தலைவர்கள் கையொப்பத்துடன் இந்திய உயராணையளூடாகப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

இம்மாத இறுதிக்குள் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இன்னொரு புறம் இடம் பெற்று வரும் நிலையில் தமிழ் கட்சிகளின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

## தரம்குறைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாபியாவுக்கு இடமளிக்கக் கூடாதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலமைக்கு மத்தியில் தரம் குறைந்த மருந்து பொருட்கள் தடுப்பூசிகள் நாட்டுக்குள் கொண்டுவரும் மாபியாவுக்கு இடமளிக்க முடியாது. ஐ,டி.எச். வைத்தியசாலையில், வாந்தி மற்றும் மயக்க நிலையை கட்டுப்படுத்துவதற்கு நோயாளர்களுக்குவழங்கப்படும்தடுப்பூசியின் தரம் குறைந்துள்ளதன் மூலம் நோயாளர்கள் இரண்டுபேர் உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது. தரம் குறைந்த மருந்து, தரம் குறைந்த தடுப்பூசியினாலா இந்த சம்பவம் இடம்பெற்றது என கேட்கிறோம். இந்த இறப்புக்களுக்கு யார் பொறுப்பு கூறவேண்டும்?

மருந்துமாபியா, தொடர்ந்தும்எமதுநாட்டின் சுகாதார கட்டமைப்பு, மருந்து கட்டமைப்பை விழுங்கியுள்ளதா என கேட்க விரும்புகிறோம். அதனால் நாட்டின் தற்போதைய பேரிடர் நிலமையில், நாடு என்றவகையில் ஒன்றாக கை கோர்த்துக்கொண்டு, அனைவரும் ஒன்றிணைந்து, இன,மத குலபேதங்கள் இல்லாமல், நாட்டை வளமான நாடாக மாற்றியமைக்க நாங்கள் கை கோர்த்துக்கொள்வோம்.

இந்த விடயங்களை நாங்கள் வெறும் வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தாமல், ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குகைகோர்த்துக்கொண்டு செயற்படத் தயாராக இருக்கிறோம் என்றார்.

# தமிழ் அரசுக் கட்சியை உருவாகிய தினத்தில் செல்வாவுக்கு மரியாதை



இலங்கை தமிழ் அரசுக் கட்சி நிறுவப்பட்ட தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு கட்சியினரால் மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண நகரில் உள்ள தந்தை செல்வா வின் நினைவிடத்திற்கு சென்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதன்போது அக்கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# பேரழிவைத் தடுக்கத் தவறியதை விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குக

## எதிர்க் கட்சிகள் சார்பில் கோரிக்கை முன்வைப்பு

'டித்வா' சூறாவளிக்கு முகம்கொடுப்பதற்காக முன்னாயத்தங்கள் இல்லாமை, இயற்கைப் பேரழிவைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையொன்றைதயாரிப்பதற்காக நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் நேற்று சபாநாயகரை வலியுறுத்தின.

புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற அனுராத ஜயரத்னவினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட இந்தப் பிரேரணையில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்கட்சிகளை சேந்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதுடன் சபாநாயகரிடம் கையளிக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதச உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். பலரும் கலந்துகொண்டனர். இந்தக்; கோரிக்கை கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான பேரழிவாக கருதப்படும் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட உயிர் இழப்புகள், சொத்துச் சேதங்கள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக இன்னும் மதிப்பீடுகள் செய்யப்படவில்லை.

ஆனால் இதுவரை நடந்துள்ள பேரிடர்களில் இது முக்கியமான ஒன்றாக நாம் கருதுகிறோம். இந்த துயர் மிகுந்த நிலமை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து, முன்னறிவிப்புகளைச் செய்திருந்தன என்பது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும், இந்த நிலமைக்கு முகம்கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் எந்த வகையிலும் முன்னாயத்தமின்றி இருந்தமை கவலைக்குரியது . முன்னாயத்த தயார் நிலை எடுக்கப்பட்டிருந்தால், ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறிப்பிட்டளவில் தடுத்திருக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

அண்மைய காலங்களில் இதுபோன்ற பேரழிவுகள் இரண்டு அதாவது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவை இடம்பெற்ற போது விசேட தெரிவுக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதன் பிரகாரம் இந்துப் பேரழிவைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையொன்றை தயாரிப்பதற்காக நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு இதனூடாக வினயமாக கோரிக்கை விடுக்கிறோம்.

அவ்வாறே, நிலையியற் கட்டளை 101 இன் விதிகளில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும், அனர்த்தங்களுக்கு இலக்கான 22 மாவட்டங்கள் காணப்படுவதனால், அந்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையிலும், எதிர்க்கட்சியில் 12 கட்சிகள் இருப்பதனாலும், எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக் கூடிய வகையிலுமாக, இதற்கேற்ற விகிதாசாரத்தில் ஆளும்தரப்பின் பிரதிநிதிகளை அதிகரிக்கக்கூடிய வகையிலுமாக, தெரிவுக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 30 வரையில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயத்தில் உங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பை மதிக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

# தேவையற்ற நெருக்கடியை ஏற்படுத்தாதீர் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணுங்கள்

## சாமர சம்பத் எம்.பி. கருத்து

எரிவாயு விநியோகம் நெருக்கடிக்குள்ளானதைத் தொடர்ந்தே 2022 காலப்பகுதியில் கோட்டபய ராஜபக்சவின் ஆளும்தரப்பு வீழ்ச்சியடைந்தது என்பதை ஆளும்தரப்பு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேவையில்லாத நெருக்கடிகளை ஏற்படுத்தாதீர்கள். ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாணுங்கள்என்பதை ஆளும்தரப்பிடம் குறிப்பிட்டுக் கொள்கிறேன் எனபுதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலமைகுறித்த சபைஒத்திவைப்புவிவாதத்தில் உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

லிட்ரோ எரிவாயு நிறுவனம் சிறந்த வகையில் எரிவாயு விநியோகத்தை மேற்கொண்டு வரும் நிலையில் அந்த விநியோகத்தை வேறொரு தரப்பிடம் வழங்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் ஓமான் நிறுவனம் இலங்கையின் தரத்துக்கமைய எரிவாயு விநியோகத்தை லிட்ரோ ஊடாக விநியோகித்தது. ஆனால் எரிவாயு விநியோகமே செய்யாத சுவிஸ் நிறுவனம் ஒன்றிடம் அடுத்த மாதம் முதல் எரிவாயு விநியோகத்தை ஒப்படைக்க ஆளும்தரப்பு முயற்சிப்பது முறையற்றதாகும்.

எரிவாயு விநியோகம் நெருக்கடிக்குள்ளானதைத் தொடர்ந்தே 2022 காலப்பகுதியில் கோட்டபய ராஜபக்சவின் ஆளும் தரப்பு வீழ்ச்சியடைந்தது என்பதை ஆளும்தரப்பு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேவையில்லாத நெருக்கடிகளை ஏற்படுத்தாதீர்கள். ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குதீர்வுகாணுங்கள்என்பதைஆளும்தரப்பிடம் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார்.

# உலக சுகாதார நிறுவனம் பாராட்டு

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரிடர் நிலமையின்போதும், அதன் பின்னரும் தொற்றுநோய்கள் பரவுவதற்கு வாய்ப்பளிக்காமல் உடனடியாக ஆளும்தரப்பு சுகாதாரப் பிரிவினரும் முன்னெடுத்த வேலைத்திட்டங்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் பாராட்டியுள்ளார்

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான இரண்டாவது சர்வதேச மாநாடு இந்தியாவின் புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் டிசெம்பர் 16 தொடங்கியது. இம்மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று இடம்பெற்றது. உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் இந்திய அரசின் ஆயுர்வேத (ஆயுஷ்) அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு இன்று வரை நடைபெறவுள்ளது. இதில் நூற்றுக்கும் அதிகமான சர்வதேச நாடுகளின் அமைச்சர்கள், விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்டுள்ள சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று (18) காலை மாநாட்டு வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, உலகசுகாதார அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலாநிதி ராசியா பென்ட்ஸே உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவும் கலந்து கொண்டிருந்தது. இதன்போது, இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரிடர் நிலமையின் போது சுகாதார சேவைகளைத் தடையின்றி வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழங்கிய தலையீடுகள், உதவிகள் மற்றும் வழிகாட்டல்களுக்காக பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ்க்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதேவேளை பேரிடரிற்குப் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்தும் பணிப்பாளர் நாயகம் இதன்போது வினவியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், ஆளும்தரப்பு முறையான மற்றும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தின் ஊடாக அனர்த்தங்களுக்குப் பின்னரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், பேரிடரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எந்தவொரு தொற்றுநோயும் பரவாத வகையில் சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அந்த வகையில் பேரிடரிற்குப் பின்னர் ஆளும்தரப்பு மற்றும் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்த இந்த வேலைத்திட்டங்களை உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் பாராட்டினார். இத்தகைய பேரிடரின்போது தொற்றுநோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவை பரவினால் ஏற்படக்கூடிய பாரதூரமான நிலமைகள் குறித்தும் அவர் கருத்து வெளியிட்டார்.

# மலையக மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை

## கலைச்செல்வி எம்.பி. உறுதியளிப்பு

பேரிடரால் அதிகம் பாதிக்கப்பட்ட மலையக மக்களை பாதுகாப்பான இடங்களில் மீண்டும் குடியமர்த்துவதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கை எடுக்குமென தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கலைச்செல்வி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமையாக இயற்கைப் பேரிடர்கள் இடம்பெறும் போது தனித்தனியே ஒவ்வொருவரும் அதற்கான பங்களிப்புகளை வழங்கி வருவர். ஆனால் இம்முறை ஆளும்தரப்பு, அமைச்சர்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புகள் என அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டதாலேயே இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு 23 தினங்களுக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது. இயற்கைப் பேரிடர்களினால் மலையக பிரதேசங்களில் வாழும் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 200 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்த மக்கள் மற்றும் மலை பிரதேசங்களில் வாழ்ந்த மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பேரிடர் இடம் பெற்ற பின்னர் இன்றும் கூட அந்த மக்கள் தமக்கு இயற்கை பேரிடர்கள் மூலம் பாதிப்பு ஏற்படும் என்ற பயத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். பெருமளவு மக்கள் இன்னும் நலன்புரி நிலையங்களிலேயே வாழ்கின்றனர்.

எவ்வாறெனினும் இம்முறை இடம் பெற்றுள்ள இயற்கைப் பேரிடர்கள் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒரு சிறந்த பாடத்தைப் புகட்டியுள்ளது. அதாவது இயற்கைக்கு எதிராக நாம் செயற்பட்டால் இயற்கையானது என்றாவது ஒருநாள் அதன் விளைவுகளை, பிரதிபலனை மீண்டும் எமக்குப் பெற்றுத் தரும் என்பதாகும்.

பேரிடரில் நுவரெலியா மாவட்டத்தில் பல வீதிகள் பல குடியிருப்புகள் உள்ளிட்ட பகுதிகள் பெரும் சேதமடைந்துள்ளன.கொத்மலை, வலப்பனை,ஹங்குரங்கெத்த போன்ற பிரதேசங்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் மக்கள் வீடுகளையும் இழந்து பெருமளவு உயிர்களையும் இழந்துள்ள நிலையையே காண முடிகிறது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்துவதே எமது ஆளும்தரப்பின் நோக்கமாகும். அதற்கான உறுதி மொழியை அரசுத் தலைவர் அநுரகுமார அந்த மக்களுக்கு வழங்கி யுள்ளார்.

இந்த இயற்கைப் பேரிடரின்போது எமது ஆளும்தரப்பு மற்றும் அரசுத் தலைவர்யின் மீதும் நம்பிக்கை வைத்து பெருமளவிலான நாடுகள் எமக்கு உதவி, ஒத்துழைப்புகளை வழங்கின. பல்வேறு நாடுகளும் எமக்கு உதவிகளை வழங்கின. சில தோட்டங்களில் தொழிலாளர்களும் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்க முன் வந்தனர். ஆனால் அந்த உதவிகள் உரிய வகையில் மக்கள் கைகளுக்குப் போய் சென்றுள்ளதா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது - என்றார்.

# சபிக்கப்பட்டவர்களா?

**என்.சத்தியமூர்த்தி**



அண்மையில் ஆடிக் களித்த பேரிடரிற்குப் பின்னர், குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ் குழுக்களில் சிலரது கரிசனை மலையகத் தமிழர்கள் பக்கம் திரும்பி இருக்கிறது. ஒரு விதத்தில் இது வரவேற்கத்தக்க விடயமே. என்றாலும், அதனை ஒட்டி, 'ஆடு நனைகிறதே என்று, ஓநாய் அழுததாம்' என்ற வசனம் அடிமனதில் அடியோடுவதும் தவிர்க்க முடியாதது.

இந்த பேரிடரை விட்டுவிடுங்கள். வருடாந்தம் பொய்யாமல் பெய்யும் மழையாலும், மலையகத் தமிழர்கள் பேரழிவை சந்தித்து வருகிறார்கள். ஒரு புறம் இயற்கை இடர்கள், அதன் காரணமாக வருடாந்தம் மலைச் சரிவுகளில் மண்ணில் புதையும் அவர்களது வீடுகள் மற்றும் கிராமங்கள். மறுபுறம், வாய்க்கு எட்டினாலும், வயிற்றிற்கு எட்டாத பெருந்தோட்ட முதலாளிகளின் ஆதிக்கம். அழிச்சாட்டியம். 'மலையக தமிழர்கள் சபிக்கப்பட்ட மக்களா?' என்று யாரோ எப்போதோ கேட்டதாக நினைவு.

அந்த வகையில், அரசு ஆகட்டும், அந்தச் சமூகத்தை பிரதிநிதிபடுத்தும் அரசியல்வாதிகள் ஆகட்டும், அமைச்சர்கள் ஆகட்டும், யாருமே மலையகத் தமிழர்களை வடக்கிலும் கிழக்கிலும் மீள்குடியமர்த்த அர்த்தமுள்ள தீர்வுத் திட்டத்தை இதுவரை முன் வைத்ததில்லை. உண்மை. ஆனால், தற்போது இது போன்ற கருத்துக்களை வேறு யாரோ முன்வைக்கும்போது, முந்திரிக்கொட்டை போல் முந்திக்கொண்டு, சில பெயர் சொல்லாத புலம்பெயர்ந்த குழுக்கள், அந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

## வாழ்வா, சாவா?

தற்போதைய பேரிடரைத் தொடர்ந்து, இவ்வாறான மனிதாபிமான முன்னெடுப்பு குறித்து, சிவபூமி அறக்கட்டளை தலைவர் திருமுருகன் முதலில் கருத்து தெரிவித்திருந்தார். அந்த வகையில், குறிப்பாக வட மாகாணத்தில் இருக்கும் ஆள்களற்ற வீடுகள் இடங்களில் மலையகத்தவர்களைக் குடியேற்றலாம் என்று திருமுருகன் கூறி உள்ளார். அது போன்றே, வட மாகாணத்தில் மூடிக் கிடக்கும் பள்ளிக்கூடங்களை திறந்து மலையக மாணவர்கள் தங்களது படிப்பை தொடர வழி செய்யலாம். என்றும் கூறினார். அதற்கும் ஒருபடி மேலே போய், பல்வேறு கோவில் நிலங்களிலும் மலையகச் சகோதரர்களை குடியமர்த்தலாம் என்றும் அவர் உளமாற நம்புகிறார்.

திருமுருகன் கருத்தில் அரசியல் இருந்ததாக யாரும் குற்றம் சொல்ல முடியாது. ஆனால், அதனைப் பிரதி எடுத்துப் பரப்பும் புலம்பெயர்ந்தோரில் சிலர், அதற்கு 'தமிழ் தேசியம்' என்ற சாயம் பூசி உள்ளார்கள். அவர்களின் உள்நோக்கம் எதுவாக இருப்பினும், எப்போது அவர்கள் வாய் திறந்து விட்டார்களோ, அப்போதே அரச தரப்பு, மொத்த திட்டத்தையும் பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே பார்க்கும். தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் குறிப்பாக கடும்போக்குள்ள புத்த பிக்குகளும் இதற்கு விதி விலக்கல்ல.

சரியோ, தவறோ, அவர்கள் கவலை அவர்களுக்கு. ஆனால், எப்போது பாதுகாப்பு குறித்த எண்ணவோட்டம் தென்னிலங்கைத் தரப்பினருக்கு தோன்றி விட்டதோ, அப்போதே இது போன்ற திட்டங்களையும் கிடப்பில் போட வேண்டியதுதான். இதுவே, புலம்பெயர்ந்தோரின் வடக்கு-கிழக்கு மக்களின் முன்னேற்றம் குறித்த கரிசனைகளுக்கும் பொருந்தும்.

## ஆச்சரியப்படுத்தியது

இதற்கிடையில், இது போன்ற கருத்தை, மலையக தமிழ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசனும் முன் வைத்துள்ளார். மலை உச்சியில் வாழும் மலையகத் தமிழர்களை, பேரிடரிற்குப் பின்னர் சந்தித்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர், அந்த மக்களுக்கு, வருடாந்த நிலச்சரிவு போன்ற பேரிடர்களில் இருந்து நிரந்தரமாக விடிவுகாலம் பிறக்க, அவர்கள் வடக்கு மாகாணம் சென்று வாழ்வதற்கு தயாரா?' என்று சாரப்படும்படி கேள்வி எழுப்பி உள்ளார். அவர்கள் ஒருமித்த குரலில் 'ஆம்' என்று பதில் கூறி உள்ளனர்.

மனோ கணேசன், தான், இவ்வாறான பதிலை எதிர்பார்க்கவில்லை என்று பதிவு செய்துள்ளார். அதாவது, தலைமுறை தலைமுறையாக, தாங்கள், பிறந்து, வாழ்ந்து வளர்ந்த வதிவிடங்களில் இருந்தும் அதற்கு காரணமான பெருந்தோட்ட சூழலில் இருந்தும் ஒரேயடியாக இடம் பெயர அவர்களில் ஒவ்வொருவரும் தயாராக இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளனர். அந்த மக்களோடு மக்களாக தலைமுறைகளாக வாழ்ந்து வரும் ஒரு சமூக-அரசியல் தலைவருக்கே, அவர்களின் மனவோட்டத்தை குறித்து சரியாக புரிதல் இல்லை என்று கூறும்போது, யாரைக் குறை கூறி என்ன பயன்?

## ஒருமித்த குரல்

இதனைத் தொடர்ந்தோ என்னவோ, பேரிடர்க் காலங்களில் மலையகத் தமிழர்களின் அவல நிலை குறித்து அவசரமாக சந்தித்துப் பேசுவதற்கு, மனோ கணேசன் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ஹோதாவில், அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கு கடிதம் எழுதி உள்ளார். அவ்வாறன வாய்ப்பு, மனோ கணேசனுக்குக் கிடைக்குமேயானால், அதனை அரசியல்ப்படுத்தாது, அனைத்து மலையக்கக கட்சிகளையும் சமுதாய அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, அதிபருடன் பேச்சு நடத்தவேண்டும்.

மனோ கணேசனோ, அல்லது தொண்டமான் குடும்பத்தவர்களோ நினைப்பது போல் இல்லாமல், அத்தகைய ஒற்றுமை முயற்சி மூலம் மலையக தமிழர்களின் பாதுகாப்பிற்கும் நல்வாழ்விற்கும் ஒருமித்த குரல் எழுப்பினால், அதனைத் தென்னிலங்கையில் உள்ள எந்த அரச தலைமையோ, அரசியல் தலைமையோ உதாசீனப்படுத்தி விட முடியாது. ஆனால், வடக்கு-கிழக்கு சார்ந்த இலங்கை தமிழர் கட்சிகளையும் அமைப்புகளையும் போலவே, மலையகத்தோரும் பிரிந்து, உடைந்தே செயல்படுகிறார்கள் என்பது, அந்தச் சமூகத்திற்கான சாபம். அதனை மாற்ற அந்த ஆண்டவனாலும் முடியாது என்றே தோன்றுகிறது.

இதற்கிடையில், அண்மையில் நடந்தேறிய, மறந்துபோய்விட்ட தேசிய இடர் முகாமைத்துவச் சபையின் கூட்டத்தில், மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. கூட்டத்தில், மலையகத் தமிழர்களுக்கான பாதுகாப்பான குடியிருப்புகள் குறித்து கலந்துரையாடல் நடந்துள்ளது. கூட்டத்தின் முடிவுகளும் அவற்றின் செயலாக்கமும் வழக்கம் போலவே, பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

அதிபர் அநுர தலைமையில் நடந்த அந்த கூட்டத்தில் நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவரான சஜித் பிரேமதாசாவும் கலந்து கொண்டுள்ளார். ஆனால், பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களின் அரசியல் அல்லது சமூக பிரதிநிதிகள் யாருமே நேரடியாகக் கலந்து கொண்டதாகச் செய்திகள் இல்லை. அவர்களுக்கு அழைப்பு இல்லை.

## தீண்டத் தகாதவர்களே

குறிப்பாக மனோ கணேசனைத் தொடர்ந்து, சுமந்திரன், சாணக்கியன், சுரேஸ் பிரேமசந்திரன் போன்ற வட மாகாண தலைவர்கள், மலையகத் தமிழர்கள் குறித்து கரிசனமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவர்களில் சுயேச்சை நாளுமன்ற உறுப்பினர் அர்சுனா மட்டுமே, மலையகச் சகோதரர்களை மீள் குடியமர்த்துவது குறித்து நடைமுறைக்கு ஏற்ற கேள்வியை எழுப்பி உள்ளார். 'புலம்பெயர்ந்த தமிழ் குழுக்களின் கூற்றின்படி எத்தனை புலம் பெயர்ந்த தமிழர்கள், வட மாகாணத்தில் உள்ள தங்களது திறவா வீடுகளையும் பயன்படுத்தாத காணிகளையும் மலையகத்தோருக்கு திறந்து விடுவர்?' என்ற அவரது கேள்வியே நியாயமானது.


அருசுனாவின் இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல், மலையக மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி, பின்னர் அவர்களை மீண்டும் ஒரு முறை ஏமாற வைப்பது கொடுமையிலும் கொடுமை. வீடு, காணிகளை விட்டுவிடுங்கள், அவர்கள் வட மாகாணத்திற்கு குடிபுகுந்தால், அவர்களுடைய தற்போதைய வாழ்வாதரத்தை யார் உத்திரவாதம் செய்வார்கள்? இங்கே அவர்கள் தின கூலிகளாகத்தான் வருமானம் ஈட்ட வேண்டுமா?

## மௌன சர்ச்சை

நாடு சுதந்திரம் அடைந்த கையோடு, மலையக தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்களது குடியுரிமையும் இல்லாதாக்கப்பட்டது. அது குறித்த நாடாளுமன்ற வாக்களிப்பில், ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அன்றைய இலங்கை தமிழ் காங்கிரஸ், அரசின் முடிவை ஆதரித்தது.

பின்னர், தந்தை செல்வா, அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒருங்கிணைந்து அரசிற்கு எதிராக போரடலாம் என்று கூறியபோது, மலையக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், அதனை நிராகரித்தார். அவர் கூறியது போல், அந்தக் காலகட்டத்திலேயே. இலங்கை தமிழர்கள் தங்களது உரிமைக்காக போராடி வந்தனர். மலையக தமிழர்களோ தங்களது உடலுக்கும், உயிருக்கும், உணவிற்கும், உடமைக்காகவும் போராடக்கூட முடியாத நிலையில் இருந்தனர்.

இல்லையென்று சொல்லாமல், சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் கட்டாயப்படுத்தி இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட மலையக தமிழர்களில் சில குடும்பங்களாவது, வழியில், வன்னி காடுகளில் குடியமர, வட மாகாண தமிழர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக, அவர்களை வரவேற்றவர்களும், அவர்களுக்கான உதவிகளைச் செய்தவர்களும் உண்டு. அதுவே, அன்றைய ஜேவிபியினரும் மலையகத்தில் இருந்து தமிழர்களை விரட்டி அடித்த போதும், அவர்கள் வன்னிப் பிரதேசத்தில் குடியமர வட மாகாணத்தவர்கள்



ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால், பெரும்பாலோர் கூலி வேலை செய்யும் நிலையே தோன்றியது.

மலையகத்தமிர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்குத் தமிழ் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்ததற்கு காரணமே, அன்றைய காலகட்டத்தில், சிங்களவர்களுக்கு பின்னர், அவர்களே அதிக எண்ணிக்கையில் காணப்பட்டார்கள். அவர்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பினால், இலங்கை தமிழ் மக்கள் நாட்டின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்டவர்களாக இருப்பார்கள். இவ்வாறான ஒரு 'தியரி' அந்தக் காலகட்டத்திலும் பின்னரும் உலா வந்தது என்பது உண்மை.

இடைப்பட்ட காலத்தில், குறிப்பாகத் தலைநகர் கொழும்புவை ஒட்டி பல காலமாக வாழ்ந்து வந்த மலையகத் தமிழர்களில், சில-பலர், 1951 முதல் 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பில், தங்களை இலங்கைத் தமிழர்களாக அடையாளம் காட்டிக்கொண்டனர் என்று கூறுவோரும் உள்ளனர். என்றாலும், முப்பதாண்டு இனப்போர் முடிந்து. கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பில், தேசிய அளவில், போரில் பெரிய அளவில் உயிர் இழப்புகளைச் சந்தித்திருந்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை சொல்ல முடியாத அளவிற்கு உயர்ந்திருந்தது,

போரிலும் அதீத அளவில் பங்களிக்கவில்லை, மற்றவர்களை போல், மேலை நாடுகளிலும் பெரிய எண்ணிக்கையில் புலம்பெயர்ந்து வாழவில்லை என்றாலும், மலையக மக்களின் எண்ணிக்கை முந்தைய முறையை விட மிகவும் குறைவாகவே இருந்தது. இது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. இடையில் சிக்கிக் கொண்ட, முஸ்லீம் மக்களின் எண்ணிக்கை குறித்த மௌன சர்ச்சைகள் அப்போதே இருந்தன.

## மனித கேடயம்

அதேசமயம், கடைசிப் போரில், இறந்த அப்பாவி மக்களில் எத்தனை பேர் வன்னியில் முன்பு குடிபுகுந்த மலையகத் தமிழர்கள்? அந்த வகையில், கிளிநொச்சியில் இருந்து பின் வாங்கிய விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள், மக்கள் தொகை அதிகம் இருந்த யாழ்பாணத்தை நோக்கிச் செல்லாமல், ஏன் வன்னி வழியாக முள்ளிவாய்க்காலுக்குப் பயணித்தார்கள்? அந்தக் காலகட்டத்தில், விடுதலை புலிகள் அமைப்பு விரும்பி இருந்தால், யாழ்பாண நகரத்திலும் அண்மை பகுதிகளிலும் 'கொரில்லா' தாக்குதல்களையாவது நடத்தி இருக்க முடியாதா?

அவ்வாறு செய்யதிருப்பதற்கான உத்திரவு விடுதலை புலிகள் அமைப்பின் தலைமைக்கே எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? இனப்போர் ஒரு பக்கமாக, அரச படைகளுக்கு வெற்றியாக முடிந்த பிறகு, குறிப்பாக போர் நிகழ்ந்த பகுதிகளில், யாழ் நகரமும் அதன் மக்களும் தானே மிக குறைவாக பாதிப்பை அடைந்தவர்கள்?

முன்னர், தொண்ணூறுகளில், இராணுவத்தினிடமிருந்து யாழ்பாணவாசிகளைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, அவர்கள் அனைவரையும் ஆடு-மாடுகள் போல் வன்னிக் காடுகளுக்கு ஓட்டிச் சென்ற விடுதலை புலிகள் அமைப்பு, அத்தனை இலட்சம் மக்களையும்கூட, பிரபாகரனுக்கு மனித கவசமாகத்தான் பயன்படுத்தினார்கள் என்பதை இப்போதாவது ஏற்றுக்கொள்வார்களா?

அதற்கும் முன்னால் இருந்து, தொடர்ச்சியாக விடுதலை புலிகள் அமைப்பின் 'மாவீரர்களின்' குடும்பத்தோர், கடைசி போர் காலத்தில், கிளிநொச்சியில் இருந்து ஓட்டிச் செல்லப்பட்ட பல நூறு அப்பாவித் தமிழர்கள் என்று, இவர்கள் அனைவரும்தானே, கடைசியில் முள்ளி வாய்க்காலில் மனித கேடயமாகப் பயன்படுத்தப்பட்டார்கள்? அவர்களோடு, உயிர் நீத்த வன்னியில் வாழந்த மலையகத் தமிழர்கள் எத்தனை பேர்? அவர்கள் எதற்காக, யாருக்காக உயிர் நீத்தார்கள்?

இந்தக் கேள்விக்கு என்ன பதில்?

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்


# திருமந்திரத்தின் சிறப்பு

‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது...’ என்கிறார் ஔவையார். இத்தகைய கிடைத்தற்கரிய இந்த மானிடப் பிறவியை ஒருவர் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழி காட்டும் தன்மை உடையதாகும். இந்து சமயம் அநாதி காலமாக அழிவின்றி நிலவி வருகின்ற ஒரு நெறி முறையாகும். ஆதலால் அதனைச் சனாதன தருமம் என்று கூறுவார். திருக்குறள், மூவரின் தேவாரம், நால் வேதங்கள், திருக்கோவையார், திருமந்திரம் ஆகிய நால் நூல்களின் கருத்துக்களும் மனிதரைப் புனிதமாக்கும் ஒரே வழியையே காட்டுகின்றன என்கிறார் ஔவைப் பாட்டி.

இதிலே திருமந்திரம் சைவ சமயத்துக்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது உலக மக்களுக்கு எல்லாம் அறத்தையும் ஆன்மீகத்தையும் மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. இத்திருமந்திரம் ஆனது மூவாயிரம் பாடல்களைக் கொண்ட ஒரு அரிய நூல் ஆகும். இது சைவ சித்தாந்தத்தின் ஆணி வேராகவும் யோகக் கலையின் மறை பொருட்களை வெளிப்படுத்தும் களஞ்சியமாகவும் மனித நேயத்தைப் போதிக்கும் அற நூலாகவும் திகழ்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமந்திரத்தை இயற்றிய திருமூலர், சைவ சமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களில் முதன்மையானவராகவும் போற்றப்படுகின்றார். மேலும் இவர் அருளிச்செய்த இத்திருமந்திரம், சைவத்திருமுறையுள் பத்தாவதாக அமையப் பெறுகிறது. இந்நூல் ஒரு தோத்திர நூலாகவும் விளங்குவதோடு ‘ தமிழாகமம் ‘ என்று சிறப்பிக்கப்படுகிறது. அத்துடன் திருமூலர் தனது பாடல்களில் சாதி மறுப்பை மிகத் தெளிவாகக் கூறுகிறார். ‘சாதி இரண்டொழிய வேறில்லை‘ எனத் திட்டவட்டமாகக் கூறி மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமம் என்பதை வலியுறுத்துகிறார். இத்திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும் அனைவரும் அறியக்கூடிய எளிமையும் இனிமையும் உடைய பாடல்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

‘அன்பே சிவம்‘ என்ற தொடரைப் பலரும் அறிவோம். மனிதர்கள் ஏனைய மனிதர்கள் பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அதேவேளை உண்மையான அன்பினாலே இறைவனை அடையலாம் என்ற பேருண்மையை மேற்குறிப்பிட்ட தொடரின் ஊடாக மிக அழகாக கூறுகிறார். திருமந்திரத்தின் சிறப்பான அம்சங்களில் ஒன்று அது யோகக் கலைக்கு அளித்துள்ள முக்கியத்துவம் ஆகும். ஆட்டாங்க யோகத்தின் எட்டு அங்கங்களையும் திருமந்திரம் தெளிவாக விளக்குகின்றது. ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திடம்பட மெஞ்ஞானம் சேரவுமாட்டார்‘ என்ற திருமந்திரம், உடல் நலத்தின் முக்கியத்தை உணர்த்துகிறது. உடலை கோவிலாகப் பேணவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி உடல் நலம் பேணுதல் ஆன்மீக முன்னேற்றத்துக்கு அவசியம் என்பதை தெளிவுபடுத்துகிறது.




மேலும் பிறருக்கு உதவுதல், கொல்லாமை, ஈகை போன்ற அறநெறிக் கருத்துக்களைத் திருமந்திரம் பரவலாகப் போதிக்கின்றது. சமுதாயத்தில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர புரிதல் ஆகியவற்றைப் பேணுவதற்கான ஒரு வழிகாட்டியாகத் திருமந்திரம் செயற்படுகிறது.

அத்துடன் திருமந்திரப் பாடலகள் அவற்றின் எளிமையான நடையால் தமிழ் இலக்கிய உலகில் தனித்துவம் பெறுகின்றது. திருமந்திரமானது மரபுச்செய்யுள் வடிவில் இருந்தாலும் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை எளிமையான நடையால் தமிழ் இலக்கிய உலகில் தனித்துவம் பெறுகின்றது. திருமந்திரமானது மரபுச்செய்யுள் வடிவில் இருந்தாலும் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை எளிமையாக வார்த்தைகளில் திருமூலர் பாடியுள்ளார். உவமைகள், உருவகங்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி நுட்பமான கருத்துக்களையும் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் அழகாக எடுத்துரைக்கிறார். இதுவே திருமந்திரத்தின் காலத்தால் அழியாத இலக்கிய சிறப்பாகும். இதன் பக்திப் பரவசமும் ஞான அழமும் ஒழுக்க நெறியும் வாசகர்களின் மனதில் ஆழமாகப் பதிந்து அவர்களை ஒரு மேம்பட்ட வாழ்வை நோக்கி இட்டுச் செல்கிறது.

திருமந்திரமானது பக்தி, நீதி என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு யோக நூல் ஆகும். மேலும் திருமந்திரம் எனும் அற்புதக் கருவூலம் வாழ்வியலின் பன்முகத்தையும் சுவை குன்றாது, அமுத சுரபியாய் அள்ளித் தந்துள்ளது. திருமந்திரம் ஒரு பல்கலைக்கழகம். ஏனெனில் திருமந்திரத்தில் அனைத்துதுறைகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. உளவியல், வாழ்வியல், ஊழியியல், மருத்துவம், தத்துவம் துறவறம், வானசாஸ்திரம் வாரசூலம் ஆயுள் பரீட்சை எனப் பல்வேறு துறைகளையும் ஒன்றிணைத்து வாழ்வுக்கு வேண்டிய நன்னெறியை பன்முக திருமந்திரம் எடுத்துரைக்கிறது.

நவீன உலகில் மனிதர்கள் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு திருமந்திரம் ஒரு பொருத்தமான தீர்வாக அமைகிறது. மன அழுத்தம், உடல் நலக்குறைபாடுகள், உறவுகளில் ஏற்படும் விரிசல்கள் போன்றவற்றுக்குத் திருமந்திரம் முன்வைக்கும் யோகப் பயிற்சிகள், தியான முறைகள், ஆரோக்கியமான வாழ்வியல் கோட்பாடுகள் ஆகியவை சிறந்த நிவாரணம் அளிக்கின்றன.

இந்த நவீன உலகிலே ஆன்மீக அமைதியையும் மனத்தெளிவையும் அடைய திருமந்திரம் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அத்துடன் சாதி, மத பேதங்களை மறந்து மனிதர்கள் அனைவரும் அன்புடன் வாழவேண்டியதன் அவசியத்தைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. எனவே திருமந்திரம் தமிழ் மொழியின் ஞானச் சுரங்களில் ஒரு நூல் அல்ல. அது ஒரு ஞானப்பெட்டகம், ஒரு வாழ்வியல் களஞ்சியம். ஒரு சமூகப்புரட்சி ஆகும். திருமூலரின் தொலைநோக்குப் பார்வையும் மனித குலத்தின் மீதான அன்பும் ஞானத் தேடலும் திருமந்திரத்தின் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுகிறது.

காலங்களைக் கடந்து நிற்கும் திருமந்திரத்தின் சாரம். இன்றும் நம் முடைய வாழ்வைச் செம்மைப்படுத்தவும் ஆன்மிகப் பாதையில் வழிநடத்தவும் உதவுகிறது. திருமந்திரத்தைப் படித்தல், அதன் கருத்துக்களை உள்வாங்குதல் மற்றும் அதன்படி வாழ்வது என்பன ஒரு நிறைவான, அர்த்தமுள்ள வாழ்வை அடைவதற்கான வழியாகும். ஆகவே திருமந்திரத்தின் சிறப்பை அறிந்து கொண்டு அதன்படி நடந்துகொண்டு எமது அடுத்த சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்வோமாக!

சு.கேம்சிதா



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி


JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2025இல் வெளியிடப்பெற்றது